# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

## OS.No. 181/2021

| | | |
|---|---|---|
| Name | : | திரு . ஜான் பிரபு **Dw1** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 25th day of August 2025.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் பிரதிவாதி ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொன்னவை தான். அத்துடன் 3 ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். அவை 1) 18.02.2021 ம் தேதி பிரதிவாதிக்கு, தூத்துக்குடி மாவட்ட காவல்துறை பொது தகவல் அலுவலர், கூடுதல் காவல் கண்காணிப்பாளர், பிரதிவதி தகவல் உரிமைச்சட்டப்படி கோரிய தகவல்களுக்கு அனுப்பிய கடிதம், அது சம்பந்தப்பட்ட தகவல் 17.12.2020 ம் தேதிய பிரதிவாதியின் புகார் மனு, புகார் ரசீது, பிரதிவாதி மற்றும் ஆரோக்கியராஜ் ஆகியோரின்

ஸ்டேட்மென்டுகள் அடங்கியது பி.வா.சா.ஆ. 1 வரிசை ஆகும். 2) 02.02.2021ம் தேதி பிரதிவாதியின் மனைவி, வழக்கறிஞர் மூலமாக ஆரோக்கியராஜ் என்பவரின் வழக்கறிஞருக்கு அனுப்பி பதில் அறிவிப்பின் அலுவலக நகல், அஞ்சலக ரசீதுகள் 3 உடன் பி.வா.சா.ஆ. 2 வரிசை ஆகும். 3) ஆரோக்கியராஜ் என்பவர், பிரதிவாதியின் மனைவி J. நிர்மலா மீது சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த STC No. 407/2021 புகார் மனுவின் சார்பு நகல் பி.வா.சா.ஆ.3 ஆகும். பிராது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

**குறுக்குவிசாரணை இன்று இல்லை.**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi